

# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)

**துன்பத்தில் 'முன்னேறிச் செல்ல' விசுவாச தைரியம் வேண்டும்!**

ஒரு உத்தம விசுவாசிக்கு, தேவனுடைய வழி குறுகலாகி நெருக்கமாய் மாறிடும் நிலை ஏற்பட முடியும்! விவரிக்க முடியாத துன்பத்திற்குள்ளும் அவன் சென்றிட முடியும்! அந்த நிலையில், அவனால் பின்னால் போகவும் முடியாது, முன்னேறிச் செல்லவும் முடியாது! அவனுடைய வலதுபுறமும் பூட்டப்பட்டு, அவனுடைய இடதுபுறமும் பூட்டப்பட்டிருக்கும்! அவன் இப்போது செய்ய வேண்டியது என்ன? இந்த சரியான தருணத்தில்தான் எஜமானாகிய ஆண்டவரின் வார்த்தை "நீ நின்று கொண்டிரு!" என கட்டளை பிறப்பிக்கிறது.

'இச்சமயங்களில்' நம்பிக்கை இழக்கும் இந்த உலகமாந்தர்கள் "இனி பிரயோஜனமில்லை, உன் விசுவாசத்திலிருந்து வழிவிலகி, மடிந்து போவாயாக!" என்றே உரைப்பார்கள். ஆனால் தேவனோ, தம்முடையவர்களுக்கு உற்சாகமான தைரியத்தை தந்து, இப்படிப்பட்ட மோசமான நிலையிலும் "உன்மீது நான் வைத்த அன்பில் களிகூருவாயாக! என்றும், என்னுடைய உத்தமத்தில் நிலைத்திருந்து மகிழ்ந்திருப்பாயாக!" என்றுமே கனிவுடன் கட்டளையிடுவார்!

-tr

பெட்டகம் 40 | ஜுன் 2024 | பரல்கள் 6



## யாருக்கு வழங்குவார் 'பரிசுத்தாவியின் எழுப்புதல்?'

நாம் வாழும் இந்த கடைசி காலத்தில் "பொறுக்கி எடுத்தது போன்ற" ஆழமான ஆவிக்குரிய தைரியம் கொண்ட புருஷர்களே தேவனுக்கு தேவையாயிருக்கிறார்கள்! எங்கோ ஒரு மூலையில் 'எழுப்புதல் எங்கே?' என்ற கூக்குரலும்.... எங்கோ மற்றொரு மூலையில் 'உயிர்ப்பிக்கும் புதிதான ஆவியின் அபிஷேகமே' இன்றைய தேவை எனவும் கூக்குரல் ஒலிக்கிறது! தேவனோ, இந்த இரண்டுமே இன்றைய அழியும் காலத்திற்கு தேவை என்பதை அறிந்திருக்கிறார். தேவனுடைய வல்லமைக்கோ அல்லது அவரது எழுப்புதலுக்கோ பஞ்சம் ஏதும் தேவனிடம் இல்லை! ஆனால் இருட்டில் வாழும் எலிகளுக்கு அவர் ஒருபோதும் எழுப்புதல் தரமாட்டார்! யாதொன்றும் செய்ய இயலாமல், தத்தி செல்லும் முயல்களுக்கு தன்னுடைய அபிஷேகத்தின் வல்லமையை ஊற்றவும் மாட்டார்!

இந்த வேத வசனத்தைப் பாருங்கள்: "அவைகளில் ஒன்றையும் குறித்து கவலைப்படேன்! என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" என்றார் (அப்.20:24).

பவுல் அப்போஸ்தலன் வைத்திருந்த இத்தனை மகத்துவமான ஆவிக்குரிய தைரியத்தை விட, குறைவான தரத்தை தேவன் நம்மிடம் ஒருபோதும் விரும்புவதில்லை!

*-Ed*

### 2024 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **ஜுன் 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## இரவில் கடலை அமர்த்தி, பகலில் பாதை உண்டாக்கினார்!

*'இரவிலும்' கிரியை நடப்பிக்கும் நம் ஆண்டவர்*

பகலில் வேலை செய்து இரவில் ஓய்ந்திருப்பது மனிதன்! ஆனால் "**கர்த்தர் இராமுழுவதும்** சமுத்திரம் ஒதுங்கும்படி செய்தார்" (யாத்.14:21) என காண்பது நம் உள்ளத்தை பரவசமடையச் செய்கிறது. இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தர் செய்திடும் மகத்துவ செயல் 'ஜனங்கள் விழித்திருக்கும்போது' கிரியை நடப்பித்து 'இப்போது நீங்கள் செங்கடலை கடந்து செல்லுங்கள்' என கூறவில்லை! கர்த்தரோ ஒருவர் கண்களுக்கும் புலப்படாத அந்த 'இரவு முழுவதும்' செயல்பட்ட மகத்துவமாயிருந்தது.

ஆகவே எங்கும் இருட்டாயிருந்தாலும், நம்பிக்கை உண்டாக யாதொரு தடையமும் இல்லாத **அந்த இரவு நேரத்தில்** கர்த்தரோ உங்களுக்காக வல்லமையாய் கிரியை செய்து கொண்டிருப்பார்! விடியலில் என்ன நடந்தது? இரவு முழுவதும் நடப்பித்த கர்த்தருடைய செயல், எல்லோரும் காணும்படி பகலில் வெளியரங்கமானது!

'எல்லாம் இருளாயிருக்கிறது' என்ற நிலை மானிடர்களாகிய நம் யாவருக்கும் சம்பவிக்கிறது. எங்கும் இருள் சூழ்ந்த நேரத்தில், 'ஏதாவது காணப்படுகிறதா?' என தேடிய உங்களுக்கு ஏதும் காணப்படாமல் ஏமாற்றமே ஏற்பட்டது! உங்கள் ஜீவிய பயணத்தில், தொடர்ச்சியான வெற்றியை நீங்கள் காண முடியவில்லை! எதிரே நிற்கும் சூழ்நிலைகளில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை! இதுபோன்ற காரிருள் உங்களைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டதை நீங்கள் கண்டு விரக்தியும், சோர்வும் அடைந்தது உண்டோ? அப்படியானால், இந்தப் பிரகாசமான செய்தி உங்களுக்குத்தான்!

> **"உங்களைச் சூழ்ந்து கொண்ட சமுத்திரம் ஒதுங்கும்படி கர்த்தரே கிரியை செய்வார்! எப்போது? நீங்கள் பதில் காண முடியாது விரக்தியடைந்த அந்த 'இராமுழுவதும்' கர்த்தர் கிரியை செய்தார் என்ற ஆச்சரியமேயாகும்! (யாத்.14:21).**

இவ்வித பலத்த வலிமையான கர்த்தரின் செயலை விசுவாசிக்கிற யாவருக்கும், அவர்களின் 'இராக்காலத்தில்' கர்த்தர் இன்னமும் கிரியை செய்து கொண்டுதான் இருக்கிறார்! அவர் எப்படி கிரியை செய்தார்? என தியானிப்பது நம் உள்ளத்தை பரவசமடையச் செய்கிறது:

**கடும் புயல் வீசிக்கொண்டிருந்த நேரத்தில்,** கொடிய கடல் காற்றின் சீற்றத்தில், நுரைபொங்கி வந்த பெரு வெள்ளத்தில் 'இரா முழுவதும்' அந்த சமுத்திரத்தை ஒதுங்கும்படி கிரியை செய்தார்!

**அந்த கொடிய இரவிலே பார்வோன் படையினர்** பின்னால் வந்து கொண்டிருந்தார்கள். சீறி பொங்கும் கடலின் திரள்நீர் முன்னால் இருந்தது. ஆகிலும், அந்த இராமுழுவதும் கர்த்தர் கிரியை செய்வார் என அவருடைய பிள்ளைகள் அவரை நம்பியிருந்தார்கள்!

**நேருக்கு நேராய் சமுத்திரத்திற்கு முன்பாக** தேவ ஜனங்கள் நின்றபோது "இதுவரை கண்டிராத அதிக இருள்" அவர்களைச் சூழ்ந்து கொண்டது. கர்த்தரோ, தம் ஜனம் பீதியினால் சோர்வடைந்து துவண்டு போகாதபடி தெய்வ பிரசன்னத்தால் அவர்களை மூடிக்கொண்டார்!

பாருங்கள், இரவெல்லாம் மூடியிருந்த அந்த இருள் விலகி, உதயமாயிற்று! அப்போது கர்த்தருடைய ஜனங்கள் "**கர்த்தாவே எங்களுக்கு ஒரு பாதை உண்டாக்க இராமுழுவதும் வேலை செய்தீரே!**" என மனம் நெகிழ்ந்து கர்த்தரைப் பணிந்து கொண்டார்கள்.

ஓ அன்பான துக்கத்தின் பிள்ளையே, நீ மனம் உடைந்து போகாமல் 'அந்த இரவிலே' கொஞ்சம் பொறுத்திருக்கக் கூடாதா? அவ்வித விசுவாசத்தை நீ பெற்றிருந்தால், பகலில் உனக்காக கிரியை செய்யும் ஆண்டவர் 'இரவிலும்' ஓயாது நின்று கிரியை செய்து கொண்டிருக்கிறார் என "உன் தேவனை நீ அறிந்து கொள்வாய்!" கர்த்தரின் இவ்வித வல்ல செயலை நாம் எல்லோருமே அறிந்துகொள்ள தேவன் கிருபை செய்வாராக!

- Mrs.சார்லஸ் கஃவ்மென்

---

## 'தாழ்மையை' பிறரிடம் துஷ்பிரயோகம் செய்வது தவறு!

*'குற்றப்படுத்துவதை' நியாயம் என கூறுவது கிறிஸ்தவமல்ல*

**தா**ழ்மையாய் இருப்பதில், மதியீனமான எண்ணம் கொண்டிருக்கும் அநேகர் இருக்கிறார்கள். அதென்னவெனில் "தோள் மடிந்து...... கோழையாய்" இருப்பதை தாழ்மை என எண்ணுகிறார்கள். இதுபோன்றவர்கள், தங்களை ஒன்றுக்கும் உதவாதவர்களாகவும், தங்கள் ஜீவியத்திலிருந்து ஏதாகிலும் நன்மை பிறக்குமோ? என

*தங்களைக் குறித்து "நம்பிக்கையற்ற எண்ணம்" கொண்டவர்களாயும் இருப்பார்கள். இவ்வாறாக,* "**தாழ்வு மனப்பான்மையை, தாழ்மை!**" *என எண்ணி வஞ்சிக்கப்படாதீர்கள்! உங்கள் சமுதாய தாழ்வை, தாழ்மை என சொல்லிவிடக் கூடாது! அதுபோலவே, இவ்வுலகின் எல்லா மனிதர்களுக்கும் நம்பிக்கை இருப்பதைப் போலவே, ஓர் கொடிய இழிவான பாவிக்கும் நம்பிக்கை நிச்சயமாய் இருக்கிறது. எனவே கடந்த காலத்தில் நீங்கள் எப்படி இருந்தீர்கள்? உங்களின் சமுதாய ஏற்றத்தாழ்வு என்ன? என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல..... உங்கள் உள்ளான மனதில், நீங்கள் எவ்வளவு தாழ்மையாய் 'இப்போது' இருக்கிறீர்கள் என்பதும், எவ்வளவு தாழ்மையாய் மாறப் போகிறீர்கள் என்பதும் ஆகிய* **இருதய தாழ்மையின் வழி மாத்திரமே உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை நிர்ணயிக்கக் கூடியதாய் இருக்கிறது!**

*இவ்விஷயத்தில் தேவன் அப்பழுக்கற்ற நீதியுடன் செயல் படுகிறார்! ஆம், ஒரு துளியேனும் "பாரபட்சத்தை" அவரிடம் காணவே முடியாது! நீங்கள் இப்போதுதான் இரட்சிக்கப்பட்ட புதிய சகோதரனாகவோ அல்லது நீங்கள் ஒரு "மூத்த சகோதரனாய்" இருப்பதுவோ அவருக்கு பொருட்டல்ல! அவருடைய பிரமாணத்திற்கு முன்பாக எல்லோரும் சமமானவர்களே!*

> "பெருமை கொண்டவன் தன்னுடைய கண்களுக்கு ஞானியாகவோ அல்லது தன்னைக் குறித்த மேட்டிமை சிந்தை கொண்டவனாகவோ இருந்துகொண்டு, பிறரை 'தாழ்மையில்லாதவன்' என நியாயம் தீர்த்து, குறைகளும் குற்றங்களும் கூறத்துவங்கினால்..... இதை விட மோசமானது வேறெதுவுமே இல்லையெனலாம்!

*ஆம், இந்நிலையில் இருக்கும் ஒருவன் இருளின் ஆழத்திற்குள் சென்று விட்டான் என்றே கூறவேண்டும்! பெருமையின் விளைவினால் இவ்வித இருளுக்குள் வந்து விட்டவன், இரட்சிப்பைப் பற்றியோ தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றியோ ஏதும் விளங்கிக் கொள்ள முடியாத நிலைக்குச் சென்று விடுவான்!*

***மே**லும், "நான் பிறரை குறை கூறியது நியாயமான செயலே!" என எண்ணும் அகந்தையான நிலைக்கு வந்த ஒருவனிடம், தேவன் தன் பிரமாணத்தின்படி கண்டிப்பாய் குறுக்கிட்டு அவனை தாழ்த்துவார்!*

*இரட்சிப்பின் ஆழமான பொருள், நம்முடைய உள்ளான மனிதனில் நாளுக்கு நாள் நாம் அடையும், கிறிஸ்துவின் சாயலாக "மறுரூபமடையும்" செயலேயாகும்!*

*நீங்கள் பற்பல ஊழியங்கள் செய்தாலும்..... அதையும்*

*'வல்லமையாய்' செய்தாலும், நீங்கள் பெற்றுக்கொள்ளும் 'தேவ சாயலுக்கு' அவைகள் ஒப்பானது அல்ல, மாற்றும் அல்ல! தாழ்மை அள்ளித்தரும் இரட்சிப்பு "உள்ளான ஜீவியத்திற்குரியது". ஆம், அது மறுரூபமடையும் மகிமையின் வாழ்வு!*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## சூழ்நிலையில் நம்மை 'தனியே விட்டுவிடாத' கர்த்தரின் உத்தமம்!

*தேவனை அறியாதவர்களுக்கே 'தனிமை பயம்' உண்டு*

*தங்களை கிறிஸ்தவ விசுவாசிகள் என சொல்லிக்கொள்ளும் திரள் கூட்டத்தாரில் 'பெரும்பாலோர்' தேவனற்றவர்களாகவே ஜீவிக்கிறார்கள்! அவர்களுக்கு ஏற்படும் பண கஷ்டம், சரீரநோவு, அவமானம் போன்ற துன்பங்களில் 'தனிமையில்' வாடி வதங்குகிறார்கள். அவர்களுக்கு ஏற்படும் மரணமும் 'தனிமையின்' துயரமாகவே முடிகிறது. ஆ, இது பரிதாபம்! இயேசு குறிப்பிட்ட, மனுஷனுக்கு நேரிடும் "அன்றன்றுள்ள பாடுகள்" எத்தனை, எத்தனையாயிருக்கிறது! இதில் சிக்கிக் கொள்ளும் அஞ்ஞானியான மனுஷன் 'மூளை சிதறி' பித்துப் பிடித்தவனாய் சஞ்சலக்குழிக்குள் போய் விடுகிறான். பணமும், பவுசும் அவனை வெளியரங்கமாய் மூடியிருந்தாலும், அவனுடைய உள்ளத்தின் சமாதான சிதைவு மனுஷர் கண்களுக்குத் தெரிவதில்லை. விருந்துண்ணும் வேளையில் மகிழ்வுடன் நகைக்கிறான்! ஆனால் அவன் உள்ளத்தின் ஆழத்தில் கசப்பு குடிகொண்டிருப்பதை வெளியே உள்ளவர்கள் அறிய முடிவதில்லை. தேவனை அறியாத உலக மானிடன் இப்படித்தான் வாழ்வான் என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை!*

*நமக்கு ஆச்சரியமாய் இருப்பதெல்லாம், கிறிஸ்தவன் என்ற பெயருடையவன், அஞ்ஞானிகளைப் போலவே 'தனிமையில் வாடுவதே' நமது ஆச்சரியமாயும் வருத்தமாயும் உள்ளது!*

> "ஒரு தேசத்திற்காக போர் புரிந்திடச் சென்ற ஒரு வீரன் 'தனிமையில்' மரிக்கலாம்! ஆனால், இயேசு கிறிஸ்துவின் சிலுவைக் கொடி பிடித்த எந்த போர் வீரனுக்கும் இப்படி ஒரு இழிநிலை ஒருபோதும் இல்லை!

*நீடித்த பயணம் சென்ற ஒரு மிஷனெரியோ, அவனுடைய குடும்பமோ, சத்தியத்தை அறிவிக்க பயணித்த அவருடைய தாசர்களோ, உத்தம மேய்ப்பர்களாய் பாடுபடும் கிறிஸ்துவின் உடன் ஊழியர்களோ, அவர்களில் ஒருவரும், ஒருபோதும்.... ஒருக்காலும் தனித்து இருந்ததில்லை!*

*சொல்லி முடியாத பாடுகள் அனுபவித்து, மலைஜாதியார்*

மத்தியில் 'இரத்த சாட்சியாய்' மரித்த ஏராளமான கிறிஸ்தவ சிலுவை வீரர்கள் உண்டு! ஆகிலும், அவர்களில் ஒருவர்கூட தங்களின் கடுமையான மிஷனெரி தளத்தில் 'தனியாய்' இருந்ததேயில்லை! மலை ஜாதியாரின் பகைக்கு ஆளாகி, விஷ அம்புகளால் கொல்லப்பட்ட அநேக மிஷனெரிமார்கள் உண்டு! ஆனால் **அவர்களோ 'தனியாய்' மரிக்கவில்லை!** அவர்கள், இயேசு கிறிஸ்துவோடு இருந்தார்கள்! ஆண்டவர் இயேசு, தான் உரைத்த வாக்கிலிருந்து மாறாமல், மடிந்து விழுந்த அவர்களைத் தன் கரத்தில் ஏந்தி, அணைத்துக் கொண்டு, பாடுகளும் வேதனையும் இல்லாத தன் இன்ப ராஜ்ஜியத்திற்குள், அவர்களை ஜெய வீரர்களாய் அழைத்துச் சென்றுள்ளார்.

நம் கர்த்தரின் உயிர்த்தெழுதல் ஒரு 'ஈஸ்டர்' பண்டிகை அல்ல. உயிர்த்தெழுந்த ஆண்டவர், சதா காலமும் உயிரோடிருக்கிறவராய் என்றென்றும் நம்மோடு இருக்கிறார்! என்ற அசைக்க முடியாத உண்மையை, ஒவ்வொரு நாளும் பாடி மகிழ்வதே நம்முடைய மாறாத பங்கு! காலமெல்லாம் கிறிஸ்தவ மதத்தில் வாழும் ஒரு கிறிஸ்தவனிடத்தில் சென்று 'ஈஸ்டர்' எப்பொழுது வருமென்று கேளுங்கள்! அவன் உடனே ஒரு மாதத்தையும் ஒரு நாளையும் குறிப்பிட்டு, அன்றுதான் ஈஸ்டர் வருமென்று கூறுவான்!

> “ உயிருள்ள கிறிஸ்துவை, அஞ்ஞானிகளைப்போல் 'ஈஸ்டர்' பண்டிகை கொண்டாடும் இவர்களை என்னவென்று சொல்வது?

*உயிர்த்தவர் 'நம்மோடு சதாகாலமும் இருப்பதற்கே' உயிர்த்தார்! என அறிந்து வாழும் கிறிஸ்தவனே ஜெயங்கொண்ட கிறிஸ்தவன். வறுமையோ, வியாகுலமோ, அவமானமோ, நிந்தையோ, வியாதியோ, வருத்தமோ, உயர்வோ அல்லது தாழ்வோ.... ஆகிய யாதொன்றிலிருந்தும் நம்மை அவர் தனியே விட்டுவிடமாட்டார்! உயிருள்ள கிறிஸ்து நம்மோடு இருக்கும்போது, நாம் அவரைச் சுற்றி வந்து செய்ய வேண்டிய பணி ஏராளமுண்டு..... அவர் குரல் கேட்போம்! கடிந்துரைக்கும் புத்திமதி கேட்போம்! அவர் தரும் ஊழிய கட்டளை கேட்போம்! இவ்வாறு அவரைச் சுற்றிச் சுற்றி வந்து சிட்டாகப் பறந்து செல்லும் ஊழியங்கள் ஏராளமுண்டு. சகலத்தையும் செய்து முடித்த பிறகும், அவர் பாதத்தில் அமர்ந்து, அன்புகூர்ந்து செய்திடும் நன்றி ஆராதனையும் நமக்குண்டு!*

உயிரோடு எழுந்தவரை துணையாகக் கொண்ட கிறிஸ்தவன், மகா தைரியங்கொண்டவன். அதற்குரிய இரகசியம் என்னவென்றால் "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் **நான்**

**உங்களுடனே கூட இருக்கிறேன்** *என்றார்" என உரைத்த ஆண்டவருடைய வாக்கினிமித்தமே அல்லாமல், வேறொரு தைரியம் அவர்களுக்கு வேறு யாதொன்றும் இல்லை!*

*- A.W.டோசர்*

---

## 'தேவனுடைய சாயலாய்' மாற்றிடவே சகலமும் செய்தார்!

*என்னைக் குறித்த வரைபடம், கர்த்தரிடம் உண்டு*

*என் இருப்பிட மாளிகையை, மருத்துவமனை பொது - வாழ்விற்கு கொடுத்து விட்ட பிறகு, ஏரிக்கரையிலுள்ள இடத்திற்குச் சென்று வீடு தேட ஆரம்பித்தேன். அங்கிருந்த பூட்டிய வீடு ஒன்றை நான் தேடிச் சென்றேன். அந்த வீட்டின் அமைப்பு, மிகவும் ஏழ்மையான தோற்றத்திலிருந்தது. சமையலறையின் புகைபோக்கிகூட, அங்கே இல்லை! இருப்பினும், கர்த்தர் காண்பித்த வீடாய் நான் அதை ஏற்றுக்கொண்டேன். என் மகளுக்கும், அவளை பராமரிக்க நான் வைத்திருந்த பணிப்பெண்ணுக்கும் அந்த வீட்டிலிருந்த பெரிய அறையைக் கொடுத்தேன். எனக்கு எடுத்துக்கொண்ட படுக்கை அறையோ, ஏணியில் ஏறிச்சென்று பிரவேசிக்கும் அறையாயிருந்தது. நான் வீட்டு சாமான்கள் எதையும் எடுத்து வராதபடியால், படுக்கைகளை மாத்திரம் விரித்து, தங்கிக்கொள்ள ஒழுங்கு செய்தேன். வைக்கோல் வைத்து தைத்த நாற்காலிகள் என்னிடம் இருந்தது.*

> **"சமையலுக்குரிய சிலிக்கான் மண் பாத்திரங்களும் வைத்திருந்தேன். என் புதிய இருப்பிடம் எளிமையாயிருந்தாலும், "இயேசு கிறிஸ்து வாழ்ந்த எளிமையை ஒப்பிட்டுப் பார்த்து, வெகுவாய் மன திருப்தி அடைந்தேன்!"**

*நான் வைத்திருந்த விலையுயர்ந்த 'போர்சிலின்' தட்டுகளை விட அங்கிருந்த 'மரத்திலான தட்டுகள்' என் மனதிற்குப் பிடித்திருந்தது! நானும், என் மாளிகையிலிருந்த அனைத்து மளிகை சாமான்களையும் கொண்டு வந்து, அடுக்கி வைத்துக் கொண்டேன். அது அனைத்தும், நான் இந்த எளிய ஸ்தலத்தில் நீண்ட வருடங்கள் இருக்கப் போவதைப்போல் தோன்றியது!*

*ஆனால், "ஒரு அருமையான எளிய அமைதியிலும் சமாதானத்திலும், தங்கியிருப்பதை" பிசாசானவன் விரும்பவில்லை. அவன் என்னவெல்லாம் எனக்கு தீமைகள் செய்தான் என்பதை விவரிப்பதற்கு போதுமான வார்த்தைகள் என்னிடம் இல்லை. அந்த அளவிற்கு துன்பங்களையும் உபத்திரவங்களையும் எனக்கு விரோதமாக*

*பயங்கரமான தாக்குதல் செய்தான்! சில ஜனங்கள் என் வீட்டைச் சுற்றிலும் நின்றுக்கொண்டு பெரிய பெரிய கற்களை எறிந்தார்கள். சில கற்கள் கண்ணாடி ஜன்னல்களை உடைத்து, என் கால் மாட்டில் விழுந்தன. வீட்டைச் சுற்றி வெறுமையாய் கிடந்த தோட்டத்தை மிக நேர்த்தியான இனிமையோடு பராமரித்து வைத்திருந்தேன். அதையும் அவர்கள் விட்டு வைக்காமல், உள்ளே நுழைந்து எல்லா செடி கொடிகளையும் நாசமாக்கி, போர்க்கோலமாக்கி விட்டார்கள். ஒரு இரவு முழுவதும் வீட்டு வாசலுக்கு முன்பாக நின்று, அருவருப்பான தீய வாசகங்களைப் பேசி, கதவைத் திறக்கும்படி பலமாய் சத்தமிட்டார்கள்! கதவை உடைப்பதற்கும் ஆயத்தமாகி விட்டார்கள்!*

> **"**
> என் வீட்டிற்கு எதிராய் நின்று கலகம் செய்தவர்கள் "பிஷப் அனுமதித்தே" இவ்வாறு செய்கிறோம் என மூர்க்கமாய் கூறிச் சென்றார்கள்.

இவ்வித சூழ்நிலையில், '*டோனான்*' நகரில் தங்கியிருந்த தந்தை *லா-கோம்பே* அவர்கள் உபத்திரவத்திற்குள்ளான என் வீட்டிற்கு வந்து எவ்வித ஆதரவும் தராதிருக்கும்படி, *டோனான்* ஊரிலேயே அவர் தங்கியிருக்கும்படி நிர்ப்பந்தம் செய்யப்பட்டார். நானோ, "**தேவன் வைத்திருந்த அடுத்த வரைபடத்தை**" (The Designs of God) *அறியாதவளாய் திகைத்தேன்! ஒருவேளை, இந்த அமைதியான ஸ்தலத்தை விட்டு வெளியே போக தேவன் அனுமதிக்கிறாரோ? நானோ, எத்தனை எதிர்ப்புகளும் நிந்தைகளும் ஏற்பட்டாலும், தெய்வீக அமைதி கொண்ட இந்த ஸ்தலத்திலேயே இருப்பதற்கு வெகுவாய் விரும்பினேன்.*

***இ****ந்த ஸ்தலத்தை "ஒரு அழகிய பறவை கூடுபோல்" நான் மகிழ்ச்சியுடன் கருதினேன். இந்த ஸ்தலத்திலேயே இருந்து, கிறிஸ்துவைப்போல் மாறி, அவருடைய ஊழியங்களை செய்து முடிக்கலாமே! என்ற ஆவலும் எனக்குள் இருந்தது. ஆனால் பிசாசானவனோ என்னைத் துன்புறுத்திய கூட்டத்தாரை, இன்னும் அதிக மூர்க்கமடைய தூண்டினான்!*

> **"**
> திடீரென்று ஆட்களை அனுப்பி "இந்த ஸ்தலத்தையும், டயோஸிஸ் எல்லையையும் விட்டு விட்டு, வெளியேற வேண்டும்" என்ற அவர்களின் விருப்பத்தை பகிரங்கமாய் கூறினார்கள்!

*இந்த டயோஸிஸின் எல்லை முழுவதும், அங்குள்ள மக்கள் யாவருக்கும் நான் செய்த பல்வேறு நற்செய்தி ஊழியங்கள் தீமையாக*

பேசப்பட்டது! இன்னும் அதிகமாய், ஒவ்வொரு நற்செயல்களையும் 'குற்றங்களாகவே' விமர்சிக்கத் தொடங்கினர். நான் வியந்து பார்த்தது என்னவென்றால் "குற்றங்களை இவர்கள் சகித்துக் கொள்வார்கள்! ஆனால் என்னை அவர்கள் சகித்துக் கொள்ள மாட்டார்கள்!" என்ற நிலையேயாகும்.

இப்படியொரு கலகம் எனக்கு விரோதமாய் நடந்தபோதும், "எனக்குள் யாதொரு வருத்தமோ அல்லது எல்லாவற்றையும் விட்டு விட்டு தெய்வ ஊழியத்திற்கு வந்தோமே என்ற ஆதங்கமோ" சிறிதுகூட எனக்கு ஏற்படவில்லை! அனைத்தும் தேவ சித்தத்தின்படியே நடந்திருக்கிறது என்ற என் உறுதியான விசுவாசத்தில் "**சகலமும் தேவனுடைய கரத்திலிருந்தே வருகிறது**" என்ற உணர்வில், திருப்தியாகவே இருந்தேன்! அவர் அனுமதித்து, எனக்கு நடந்த 'எல்லா சிலுவைகளும்' அவருடைய நீதியின்படியும், அவருடைய இரக்கத்தின்படியும் நடந்தது என, பூரண இளைப்பாறுதலைக் கண்டடைந்தேன்!

- மேடம் குயான்

---

## என்னைப் பகைத்து, சபைக்கு விரோதம் செய்தனர்!

*கிறிஸ்து கட்டும் சபை, காக்கப்படும்*

சென்னை இராயபுரம் சபையில் 10 வருடங்களுக்கு மேலாய் கர்த்தருடைய ஊழியம் செய்துகொண்டிருக்கையில் 1916-ம் வருஷம் ஜெனரல் அசம்பிளி சங்கத்தார் என்னை தென் இந்தியா, இலங்கை, யாழ்ப்பாணம் முதலிய இடங்களுக்குப்போய், அங்குள்ள சபைகளிலும் கல்லூரிகளிலும் ஆவிக்குரிய கூட்டங்களை நடத்தும்படி அழைத்தார்கள்.

அங்கு செய்த பிரயாணங்களையும், நடத்தின கூட்டங்களையும் பற்றி கூறவேண்டுமென்றால் "கர்த்தரின் நாமம் மகிமைப்பட்டது!" என்றே சாட்சி கூறுவேன்.

> "**உலகயுத்தம் நடந்த காலத்தில், கேரளத்திலிருந்த ஜெர்மன் மிஷனெரிகளைச் சேர்த்து வட இந்தியாவிலுள்ள ஓரிடத்தில் அடைத்து வைத்திருந்தார்கள்!**

மலையாளத்தில் இவர்கள் வேலை செய்துகொண்டிருந்த 17 மிஷன் ஸ்டேஷன்கள் உண்டு. அந்த வேலைகளை மேல்பார்க்க ஒரு மிஷனெரியும் ஒரு போதகரும் தேவையாயிருந்தது. பசுமலையிலிருந்த கனம் டிக்ஷன் மிஷனெரியையும், இராயபுரத்திலிருந்த என்னையும் தெரிந்து கொண்டார்கள்.

*இச்சமயம் இராயபுரம் சபையில் குழப்பம் உண்டானது. என்னோடு வேலை செய்து வந்த கமிட்டி மெம்பர்களை அகற்றி, அவர்களுடைய ஸ்தானத்தில் புதுக்கமிட்டிமாரை ஏற்படுத்திக் கொண்டார்கள்! அவர்களில் சிலர், பல அற்ப காரணத்தால் சபைக்கே வராமல் நின்றுபோனவர்கள்! மற்றவர்கள், நான் அழைத்தபோது கமிட்டி மெம்பர்களாவதற்கு மனமற்றிருந்தவர்கள்! இச்சமயம் இவர்கள் ஒன்று சேர்ந்து எனக்கு விரோதமாக வேலைசெய்யத் தீர்மானித்தார்கள். இராயபுரம் சபைக்கு நான் மறுபடியும் வராமல் என்னை விலக்கிவிடவும், தங்களைச் சேர்ந்த ஒருவரை சபைக்குப் போதகராக நியமிக்கவும் ஏற்பாடு செய்தார்கள்!*

**“ என்னிடம் அன்பாயிருந்த தேவ மக்கள் இதைச் சகிக்க முடியாமல் எனக்குக் கடிதங்கள் எழுதி: ஐயா, சீக்கிரமாக வந்து விடுங்கள், உங்களுக்கு விரோதமாகக் காரியங்கள் நடக்கிறது, தாமதியாது வாருங்கள் என்று அழைத்தார்கள்!**

*நானோ, ஊழியத்தை இடையில் விட்டு விட்டு வரக்கூடாது என்ற உறுதியுடையவனாய் இருந்தபடியால், அவர்களின் கடிதங்களைக் குறித்து கவலைப்படவில்லை. இராயபுரம் சபைக்கு என்னை அழைத்து வந்தவர் கர்த்தர்! நான் விலக வேண்டும் என்பதும், வேறொருவர் இராயபுரம் சபைக்குப் போதகராக வேண்டும் என்பதும் தேவசித்தமாயிருக்குமானால் அப்படியே ஆகட்டும். நானோ ஊழியம் முடிந்து தான் திரும்புவேன் என்று அவர்களுக்குப் பதில் எழுதினேன்!*

*என் ஊழிய நாட்களை முடித்து புறப்பட்டு குடும்பத்தோடு இராயபுரத்திற்குத் திரும்பி வந்தேன். எப்போதும் அமைதலும் சமாதானமுள்ள சபையில், குழப்பத்தைக் கண்டு சஞ்சலப்பட்டேன்! என்னை அகற்ற வேண்டும், தங்களுடைய மனுஷனைப் போதகராக்க வேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் இன்னும் விட்டு விடவில்லை. என்னை புறக்கணித்து, கமிட்டி கூடும்போதெல்லாம், அவர்களே காரியங்ளைப் பேசி முடித்துக்கொள்வார்கள். ஒரு நாள் கமிட்டி கூடினபோது, ஒரு காரியத்தைப் பற்றி அவர்களைக் கேட்டேன்.*

**“ அவர்களில் முக்கியமானவர் என்னை அதட்டி: பேசவேண்டாம், வாயை மூடும்! என்றார். அவர் இப்படி என்னைக் கேட்டது, கமிட்டி மெம்பர்களுக்குச் சந்தோஷமாக இருந்தது. நானோ மறுவார்த்தை பேசவில்லை!**

*வேலையில் எனக்கு உதவியாயிருக்கும்படி நான் ஏற்படுத்தின*

உபதேசியாரும் என்னைவிட்டு விலகி அவர்களோடு சேர்ந்துகொண்டு, அவர்கள் அனுப்பும் இடங்களுக்குப்போய், அவர்கள் கரியங்களைச் செய்து வந்தார். அவர்கள் கை பலமாயிருக்கிறதென்பதைக் கண்டு, அவர் அப்படிச் செய்தார். அவர்களில் ஒருவர் எனக்கு விரோதமாகக் கடிதங்களை எழுதி கனம் ஸ்டூவார்ட் ஐயருக்கு அனுப்பியிருந்தார். அக்கடிதங்களை மிஷனெரி என்னிடம் கொடுத்தார். அவைகளைச் சமீபத்தில்தான் கிழித்தெறிந்தேன். என்னை எப்படியும் விலக்கிவிட வேண்டுமென்பதே அக்கடிதங்களின் நோக்கம். அவர்கள் செய்துவந்த காரியங்கள், கனம் ஸ்டூவார்ட் ஐயருக்குப் பிரியமில்லை.

> “ **நானோ அவர்களைப் பகைக்காமலும், அவர்களுக்கு விரோதமாக ஒன்றும் செய்யாமலும், என் கவலைகளைக் கர்த்தருக்கு அறிவித்து, அவருடைய ஊழியத்தை செய்து வந்தேன்.**

நடந்ததென்ன? என்னை விரோதித்து என்னை அகற்றிவிட வேண்டுமென்று அவர்கள் நினைத்ததுபோக, இராயபுரம் சபையில் நான் மேலும், 30 வருஷங்களுக்கு மேலாய் ஊழியம் செய்யும்படி ஆண்டவர் அருள் செய்தார்! கர்த்தருடைய ஊழியக்காரரின் சேமத்தை விரும்புகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ‘அநியாயமாக’ அவர்களைப் பகைத்துச் சஞ்சலப்படுத்துகிறவர்கள் அழிவையே தேடிக்கொள்ளுகிறார்கள். என்னை விரோதித்து, சபை ஊழியத்திற்கு இடையூறு செய்தவர்களுக்குச் சம்பவித்தவைகளை விவரம் சொல்லாமல் விட்டு விடுகிறேன். ஏனெனில், அவை சுபிட்சமான செய்தி அல்ல!

- பரமானந்தம் ஐயர்

---

## “மனசோர்விலிருந்த” சுந்தர்சிங்கை தேற்றிய ஆண்டவர்!

*பரிசுத்தஆவி மாத்திரமே, நம் உத்தம தேற்றரவாளன்*

**சா**து சுந்தர்சிங்கைப் போல் உலகப் பற்றனைத்தையும் துறந்து, பூரணதத்தம் பண்ணியவர்கள், தாங்கள் பூண்ட ‘சத்திய முழக்க’ ஊழியத்தால், தங்களுக்கு ஆதரவாய் துணைசெய்ய யாரும் இல்லையே என்ற தயக்கம் உண்டாவது சகஜமே! இவ்வித மனச்சோர்வு சுந்தருக்கு அடிக்கடி ஏற்பட்டது! தனித்துவிடப்பட்ட நிலையில், ஒருவித தளர்ச்சி சுந்தர்மனதையும் கலங்கச்செய்தது, ஓர் இயற்கைப் பிரமாணமேயாகும். சாதாரண மிஷனெரி, குருக்கள் இம்மனச்சடைவைத் தீர்க்க, தாங்கள் செய்துவரும் ஊழியத்தையே மாற்றிக்கொண்டார்கள் எனவும், நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் சாதுவுக்கோ ஜீவகாலமெல்லாம்

*தன் குருவுக்கு ஊழியம் செய்வது "அழைப்பினிமித்தம் உண்டான" அர்ப்பணமன்றோ! கர்த்தர் சொன்னால் மாத்திரமே, ஒரு ஸ்தலம் விட்டு மறு ஸ்தலம் செல்வார்! இவர் கிறிஸ்தவ சபைகளிலும், குழாங்களிலும், புறமதஸ்தவர் மத்தியிலும்* **மெய்வழி அறியாத ஆன்மாக்களை** *ஓய்வின்றித் தேடித்திரிந்தார்! இதனாலுண்டாகும் 'மூளை நரம்பிற்கு' ஏற்பட்ட நோவு கொஞ்சநஞ்சமல்ல!*

> "இத்தனை பெரிய கஷ்டத்தைத் தாங்கிக் கொள்ளும் மனோதிடம், தெய்வத்தோடு நெருங்கிப் பிழைப்பதால்தான் சுந்தருக்கு அருளப்பட்டதென்று திருவாங்கூரிலுள்ள ஒரு மிஷனெரி கூறினார்! அதுவே சுந்தரின் ஆர்வமிக்க ஊழிய திறனுக்கு மெய்யான இரகசியமாயிருக்கிறது!

*மனம் பதறிப் பேசாமலும், தம்மைக் காண விரும்புவோருக்கு ஞான வார்த்தை புகட்டுவதில் சலிக்காமலும், பகலிலும் இரவிலும் ஈசனிட்ட ஊழியங்களைச் செய்வதில் இளக்கரித்துப் போகாமலுமிருந்த சுந்தர், தம் எஜமானின் சாயலாய் இருந்தாரென்பது மிகையாகாது!* **கிறிஸ்துவின் சிந்தை** *அவரது இருதயத்தில் குடிகொண்டிருந்தது! ஆகையால் கிறிஸ்துவைப்போல் இவரும், தன் ஊழியத்தில் துணைசெய்வாரின்றி பலமுறை தனித்து நின்றார்.*

> *ஒருநாள், மனச்சோர்வு மேலோங்கிய நிலையில், சுந்தர் தனி வழியே பசியால் நலிந்து, கால்கடுக்கச் சென்று கொண்டிருக்கையில், தற்செயலாய் ஒரு மனிதன் தன்னோடு சேர்ந்து தெய்வ விஷயங்களைப் பேச ஆரம்பித்தார். சுந்தர் தனது நோவு, பசி, ஆயாசம் யாவையும் மறந்து இந்நண்பனின் தோழமையில் இன்பத்தை நுகர்ந்து பரவசமடைந்தார்! இவ்வாறு இன்ப ரதமேறிச் செல்லும் ஓர் அனுபவத்தில், இருவரும் ஒரு கிராமத்தின் எல்லையை அடைந்தார்கள். அப்பொழுது சுந்தர், தன்னை மகிழச் செய்த தோழனை இழந்து நொந்தார்; சுற்றிப் பார்த்தும் அவரைக் காணவில்லை! இது என்ன விந்தையென்று அவருக்கு விளங்கவில்லை! "நான் பலன்குன்றிச் சலித்துப்போன வேளையில் எனக்குத் தேன்மொழிமாரி சொரிந்து என்னைத் திடப்படுத்தவே எல்லாம் வல்ல இறைவன் அனுப்பிய தூதன்தான், விந்தையாய் தோன்றி மறைந்த என் தோழன்!" என்ற உறுதியான எண்ணம், சாதுசுந்தர்சிங்கை புதுபெலனடையச் செய்தது! அதுமுதல் "பரிசுத்தாவியின் தேற்றுதல் ஒன்றே போதுமானது என்ற உண்மையை அனுபவமாய் கண்டார்!*
>
> *- சாது சுந்தர்சிங்*

## ‘நீங்கள்’ நிற்கும் பூமி, சோதோம் கொமோராவா? கவனம்!

*சோதோமின் செல்வமல்ல, கர்த்தரே நம் பாதுகாப்பு*

சோதோம் கொமோரா என்பது ஓர் பெரிய பட்டணம்! அங்கு தான் ‘சவக்கடல்’ இருக்கிறது. ஆனால் ஆரம்ப காலத்தில், இந்த சோதோம் கொமோரா பட்டணம் பசுமை நிறைந்த பட்டணமாய், இந்த சவக்கடல் செழிப்பான நதியாகவும் இருந்தது. இந்த இடத்தை தெரிந்து கொண்ட லோத்து, ஆபிரகாமிடம் வந்து தன் மந்தைக்கும் ஆபிரகாம் மந்தைக்கும் ஏற்படுகிற வாதத்தைக் குறிப்பிட்டு கூறினான். அதற்கு ஆபிரகாம் “அப்படியானால், நீ உன் மந்தையோடு வலப்பக்கம் போனால் நான் இடப்பக்கம் போகிறேன். நீ கிழக்கே போனால் நான் மேற்கே போகிறேன்” என தாராளமாய் கூறினார். நாலாதிசையிலும் சுற்றிப்பார்த்த லோத்து, இந்த பசுமையான செழித்த நகரத்தையே தனக்கென கேட்டார்! ஆனால் 9-ம் வசனம் குறிப்பிடுகிறபடி சோதோம் கொமோராவில், ஒவ்வொரு நாளும் காமவிகாரமும், அசுத்த இச்சைகளும், தெய்வ பண்புகளை தூஷிப்பவர்களும் பெருகிக் கொண்டே இருந்தார்கள். ‘பாவம் அதிகரித்த நிலையில்’ தேவனுடைய நியாயத்தீர்ப்பு அந்தப் பட்டணத்திற்கு வந்தது. கந்தகமும் அக்கினியும் கொண்டு கர்த்தர் நியாயந்தீர்த்தார்.

> “
> **சோதோம் கொமோராவின் மீது தேவன் ஏன் நியாயத்தீர்ப்பை அனுப்பினார்? இந்த மகா பட்டணத்து ஜனங்கள் ‘ஒரு பொய்யான பாதுகாப்பை’ நம்பி வாழ்ந்தார்கள்.... அது, பணம் என்ற பாதுகாப்பு! தங்கள் உயிரைப் பாதுகாக்கும் வலிமையான இராணுவ பாதுகாப்பு! இதுபோன்ற இவர்களின் பாதுகாப்பை தேவன் கவிழ்த்துப் போடவே தீவிரம் கொண்டார்.**

இன்று உலகில் உங்களைச் சுற்றி நடந்து கொண்டிருக்கிற செயல்கள் அனைத்தும், மனுஷன் வைத்திருக்கிற பொய்யான பாதுகாப்பின் நம்பிக்கையை தேவன் கவிழ்த்துப் போடுவதையே காண்கிறோம்! அன்றும் எகிப்திய பார்வோன் அதிபதி, தேவனுக்கு விரோதம் செய்து, அவரை எதிர்த்து நின்றதற்கு காரணம், தன் குதிரை பலத்தையும், இரதங்களின் பலத்தையும், தன் ஈட்டிகளின் பலத்தையும் நம்பியிருந்தபடியால், “**எகிப்திய பெலனை எல்லாம்**” செங்கடலில் அழித்துப் போட தேவன் சித்தம் கொண்டிருந்தார்!

இவ்வாறு பொய்யான பாதுகாப்பில் நம்பிக்கை கொண்டிருந்த சோதோம் கொமோரா பட்டணத்தின் அடுத்த பாவம் என்னவெனில் “இச்சை கொண்ட காமவிகாரமே” ஆகும்! யோபு தன் புத்தகத்தில்

*கூறும்போது "துன்மார்க்கனின் மகிழ்ச்சி அற்ப நேரம்" எனக் குறிப்பிட்டார். அற்ப நேர இன்பத்திற்காக, நித்தியத்தை இழப்பது மதியீனமல்லவா? சிற்றின்ப மோகங்கள் ஒருவனை சும்மா விடுவதில்லை. அவனுடைய மகிழ்ச்சியை பறித்து, பாழாக்கும் குற்ற உணர்வை அவன் நெஞ்சிலே வைத்துவிடும். "தேவன் இல்லையென்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்கிறான்"(சங்.53:1). இந்த வசனம் எபிரெய மூல பாஷையில் "மதிகேடன் தன் இருதயத்தில், தேவனைப் பார்த்து 'உமக்கு இடமில்லை' என்றே கூறிக் கொள்கிறான்.*

**"இங்கு கூடியிருக்கிற அனைவருமே 'தேவன் ஒருவர் இருக்கிறார்' எனக் கூறும் ஜனங்கள்தான்! ஆனால், இந்த திரள் கூட்ட ஜனங்களில் பெரும்பாலோர் "தேவனுக்கு மறுப்பு கூறி, இல்லை" என்றே கூறி வாழ்கிறார்கள். அவரது கற்பனைகளையோ அல்லது அவரது எச்சரிப்பையோ சிறிதும் மதிப்பதில்லை!**

*திருஷ்டாந்தமாய் கூறப்பட்ட அந்த மகா பெரிய பட்டணத்தின் மூன்றாவது பாவம் என்னவெனில், அவர்களின் பெருந்திண்டியும் அதனால் ஏற்பட்ட வெறியுமேயாகும். இந்த குறிப்பிட்ட பாவங்கள் அனைத்தையும் நம் இருதயத்தில் கொண்டு வந்து சேர்ப்பதற்கு பணம் இருந்தால் போதும்! ஆனால், இதினால் வரும் கேடு என்னவெனில் 'துன்மார்க்கத்தின் வலிமை அவர்கள் மீது கொடிய பாரமாய்' இறங்கும்! என்றே லூக்கா 21:34-ம் வசனம் கூறுகிறது. இதனிமித்தமே, காலத்திற்கு முன்பாக நீங்கள் மரிப்பது மாத்திரமல்லாமல், உங்கள் ஆத்துமாவில் தேவனை இழந்து தவிப்பீர்கள்! இதுபோன்றவர்கள் தேவனுடைய அன்பில் தங்களையும் இணைத்து கலந்து கொள்வதைப் போல் பாசாங்கு செய்து விட்டு, உலகத்தையும் உலகத்தின் இன்பங் களையும் அதன் களியாட்டுகளையும் ரசிப்பதற்கு நாடுவார்கள், சபையாகிய அன்பின் விருந்தில், இந்த கிறிஸ்தவர்கள் ஒரு கறையாக இருக்கிறார்கள்!*

*இன்று ஜனங்கள் ஆடம்பரத்திலும் அழகு சாதனங்களிலும் விலையுயர்ந்த வாசனை திரவியங்களிலும் மனது வைத்து தங்கள் சொந்த சரீரத்தையே ஓர் விக்கிரகமாய் வைத்து தொழுது கொள்கிறார்கள். சோதோம் கொமோராவின் மற்றொரு குணாதிசயம் அவர்களின் பேராசை! அல்லது விக்கிரக ஆராதனை!*

**"தேவை என்பதை மிஞ்சி வரக்கூடிய அனைத்தும் பேராசை. பேராசைக்கு மற்றொரு பெயர் சூதாட்டம்! சூதாட்டவெறி இவர்களை ஆட்கொள்கிற படியினால் தேவைக்கு மிஞ்சி பணம் சேர்ப்பதற்கு அதிக நேரம் இந்த மண்ணில் உழைக்கிறார்கள்!**

இதுபோன்று பணத்தை சம்பாதிக்கும் 'சூதாட்டத்தில்' தங்கள் குடும்பங்களை அலட்சியப்படுத்துகிறார்கள்! 'நம் எல்லா தேவைக்கும்' கர்த்தர் துணை நிற்பார்! ஆனால், ஆடம்பர வாழ்விற்கான பேராசைக்கு கர்த்தர் விலகி நிற்கிறார்!

இவ்வாறான சோதோம் கொமோராவின் ஆடம்பர உச்ச கட்டத்தில்தான், தேவன் அவர்களை கைவிட்டுவிட்டார்! இதனிமித்த மாய் தேவன் **அவர்களை அவர்களின் பாவத்திற்கே ஒப்புக்கொடுத்து கை விட்டார்!** இதேபோன்ற வார்த்தை திரும்பத்திரும்ப மூன்று இடங்களில் ரோமர் 1-ம் அதிகாரத்தில் தேவன் கூறினார். இப்படித்தான் தேவன் உங்களையும் கைவிட்டு விட்டாரோ? நிச்சயமாய் இல்லை! அதுஏனென்றால், நீங்கள் இந்த செய்தியை வாசிப்பதே, நீங்கள் மீட்கப்பட மற்றொரு சந்தர்ப்பத்தை உங்களுக்கு தருவதற்குத்தான். ஆகவேதான் இதை வாசிக்கிற அனைவரையும் பார்த்து, நீங்கள் இன்னமும் தேவனால் கைவிடப்படவில்லை என உறுதியாக கூறுகிறேன். இன்றும் நீங்கள் தேவனுடைய ஈவை உணர்ந்து கிறிஸ்துவிடம் நெருங்கி வர உங்களுக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது!

- பில்லி கிரஹாம் USA

---

## 'மனதுருக்கமே' ஆத்தும பார ஊழியத்தின் ஆதாரம்!

*'பிறருக்கு நற்செய்தி'யே உத்தம கிறிஸ்தவம்*

சுவிசேஷங்களில் இயேசுவின் ஏறத்தாழ 40 அற்புதங்கள் எழுதப்பட்டுள்ளன. நான்கு சுவிசேஷங்களிலும் விவரிக்கப்பட்ட ஒரே அற்புதம், **ஐந்தப்பம் இருமீன் கொண்டு ஐயாயிரம் பேருக்குமேல்** உணவளித்ததாகும். மக்கள்மீதுள்ள இயேசுவின் கனிவு மற்றும் கரிசனையினாலேயே இவ்வற்புதம் நிகழ்த்தப்பட்டதென்பதை வேதம் கூறுகிறது! (மத்.14:13-21). சீஷர்களோ, காரணங்கள் கூறி, மனதுருக்கம் கொண்டிட தவறினர்! அவர்கள் இயேசுவைப் பார்த்து, "இவ்விடம் பாலைநிலம் ஆயிற்றே! நேரமும் ஆகிவிட்டது! ஊர்களுக்குச் சென்று தேவையான உணவு வாங்கிக்கொள்ள, மக்கள் கூட்டத்தை ஊருக்கு அனுப்பிவிடும்" என்றனர் (வச.15). இன்னொரு இடத்தில், "இவ்வளவு திரளான மக்களுக்குப் போதுமான உணவு அளிக்க நமக்குப் பாலைநிலத்தில் எங்கிருந்து கிடைக்கும்?" என்றுகூட கேட்டனர் (15:33). ஆனால் அவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிடுவதால், அவர்கள் வழியில் தளர்ச்சி அடைந்துவிட இயேசுவுக்கு மனதில்லை (வச.32). திரள் கூட்டத்திற்குத் தாராளமாய் உணவளித்தபின், மீதமுள்ளவை வீணாகாதபடி அவற்றைக் கூடைகளில் சேகரிக்கச்

சீஷர்களுக்கு கட்டளையிட்டார்!

"

**மக்கள்மீதுள்ள "மனதுருக்கத்தினாலேயே" அகிலவுலக நற்செய்திப் பணிக்கான தரிசனம் இயேசுவிடம் உருவாகியது!**

நற்செய்தியறிவிக்கவும், நோயுற்றோரைச் சுகமாக்கவும், தனிப்பட்டு 'அவரால் முடிந்தவரை' கிராமங்களையும் நகர்களையும் சுற்றிவந்தார் (மத்.9:35). அடுத்த வசனத்தை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்: "திரளான மக்களைக் கண்டபோதோ, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்ததால், **அவர்கள்மீது மனதுருகினார்**" (வச.36). தனி மனிதனாய் எல்லா இடங்களுக்கும் நற்செய்தியைத் தம்மால் எடுத்துச் செல்ல முடியாது என்று உணர்ந்தபோது, தமது சீஷர்களுக்கு விட்ட சவால்: "அறுவடை மிகுதி; வேலையாட்களோ குறைவு! ஆகையால் தேவையான வேலையாட்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் எஜமானரிடம் மன்றாடுங்கள்!" (வச.37,38). மிஷனெரிகளுக்காய் ஜெபித்தலிலும், மிஷனெரிப் பணிக்குக் கொடுத்தலிலும், மிஷனெரிப் பணிக்காய் செல்வதிலும் நாம் ஏன் தளர்ந்து விடுகிறோம், குளிர்ந்து விடுகிறோம்? என்பதற்கான இரகசியம் இங்குதானிருக்கிறது:

"

**மக்கள்மீதுள்ள "மனதுருக்கம்" குறைந்து, நற்செய்தியறிவிப்பை, வெறுமனே ஒரு செயல்திட்டமாய் மேற்கொள்ளுகிறோம். தொலைந்துபோன ஆடுகளுக்கான கரிசனையுணர்வு இன்று வெகுவாய் குறைந்துவிட்டது.**

இறையன்பு திரும்பவும் நமது இருதயங்களில் ஊற்றப்பட இறைஞ்சுவோமாக! அப்போஸ்தலரது சுவிசேஷப்பணிக்கு உந்துவிசையாயிருந்தது இதுவன்றோ? பவுல் கூறும் ஜீவ வார்த்தைகளை கேளுங்கள்: "**கிறிஸ்துவின் பேரன்பே** எங்களை நெருக்கி ஏவுகிறது!.... எனவேதான் நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கிறோம்.... ஆகவே தேவனோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் உங்களிடம் மன்றாடுகிறோம்" (2கொரி.5:14,20). பரிவுணர்வு எனும் இப்பரிமாணம் இல்லாதபோது, நாம் நற்செய்திப்பணி செய்து, அதில் எவ்வளவு விறுவிறுப்பாயிருந்தாலும்கூட, எதிர்பார்க்கும் விளைச்சல் இருக்காது! என்ற, விழிப்புணர்வு கொள்வோமாக!

*- R.ஸ்டான்லி BYM*

## ‘மாற்றம் நிகழும்’ சபையில் எழுப்புதலும் உண்டு!

*தேவ பிரசன்னம் நாடுவதே ‘மாற்றத்தின்’ வேர்*

*கோதுமை மணிக்கும், பதருக்கும் உள்ள வித்தியாசம் நாம் காண வேண்டும்! மாம்சத்தின் வெளியரங்க கிரியைக்கும், ஆவியின் கிரியைக்கும் வித்தியாசம் காண வேண்டும்! போலியை நம்பும் இந்த வஞ்சக காலத்தில் “பகுத்தறியும் வரமே” அவசரத் தேவையாயிருக்கிறது!*

*இந்த உலகமும் அதன் சிந்தையும் அத்தனை பொல்லாங்கா யிருக்கிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி கண்ட “ஆலயத்திலிருந்து தேவனுடைய மகிமை, வெளியே புறப்பட்டுச் சென்ற” கொடிய காலத்திலிருக்கிறோம். நமது ஸ்தல சபையானது, அவரது அன்பும்! அவரது விசுவாசமும்! அவரது தாழ்மையும்! கொண்டு, பரிசுத்தத்தில் வழிந்தோடும் சபையாய் இருந்திட வேண்டும். ஆம், தேவ பிரசன்னமே இன்று உண்மை சபையின் இன்றியமையாத அடையாளமாயிருக்கிறது!*

*இன்று சபையின் தலைவராய் நிற்பவர்கள்கூட, சபைக்கு கொண்டு வந்த ‘காயங்கள்’ ஏராளம் இருக்கிறது. சபைகளை கட்டுவதற்குப் பதிலாக, இவர்கள் கொண்டு வந்த ‘காயங்கள்’ துன்மார்க்கமல்லவா? இவர்களின் ஆத்திரங்களும், கோபங்களும், வெடுவெடுப்பான கசப்புகளும், மக்களை சாடும் கொச்சை வார்த்தைகளும்..... இன்னும் எத்தனையோ இவர்களின் மனுஷீக ஊழியங்களால், சபைக்கு சீரழிவைக் கொண்டுவந்துவிட்டார்கள்!*

> **“இங்கு கிறிஸ்து உண்டோ?” என சத்தியம் தேடிவந்த மாந்தர்கள், முன் மாதிரியாய் இருக்க வேண்டிய தலைவர்களிடம், கிறிஸ்துவற்ற நிலை கண்டு சிதறிப்போய்விட்டார்கள்! “பரிசுத்த குலைச்சலான பரிசுத்த வான்கள்” சபையில் இருப்பதுதான், சபைக்கு ஏற்பட்ட பெரு நஷ்டம்!**

*‘எழுப்புதல் வேண்டும்’ ‘எழுப்புதல் வேண்டும்’ என ஜெபிக்கும் கூட்டம் இல்லாமலா இருக்கிறது? ஆனால், எங்கே அந்த எழுப்புதல்?! ஆம், கிறிஸ்துவின் சுடர்விடும் ஜீவியம் சபையில் இல்லாமல், வெறும் ஜெபத்திற்கு எந்த பதிலும் உண்டாகாது! அர்ப்பண ஜீவியத்திற்கு மாற்றாக ஜெபத்தைக் கொண்டு வந்து நிறைத்துவிடலாம் என எண்ணும் இன்றைய கிறிஸ்தவம் மனம் மாற வேண்டும். அர்ப்பண ஜீவியமும், கீழ்ப்படிதலும், சீர்குலையாமல் இருக்கும் ஸ்தலத்தில் மாத்திரமே, ஜெபத்திற்கு பலன் உண்டு! இவ்வாறு சபையில், பரிசுத்தத்திற்கென தொடர்ச்சியான மாற்றம் காணும் சபை, நிச்சயமாய் எழுப்புதல் காணும்!*

*- T.ரத்தினகுமார்*

## 'இல்லாமையில் ஊழியம் செய்த'
## சுவிசேஷகர் ME செரியன்



கேரளாவின் 'குரியனூர்' ஊரில் பிறந்து வளர்ந்த *ME* செரியன் தன் 9வது வயதில் இரட்சிக்கப்பட்டார்! 15-ம் வயதில் பள்ளி ஆசிரியரானார். தன் இளமையை கர்த்தருக்கு அர்ப்பணித்து, பல இடங்களில் சுவிசேஷத்தை அறிவித்தார். அதன் விளைவாய் தன் 24-ம் வயதில் ஆசிரியர் பணியை துறந்து, கர்த்தருடைய அழைப்பின் பேரில் முழு நேர ஊழியரானார். 'பிரதரன்' சபையின் முக்கியத் தலைவராய் "சுவிசேஷகன்" என்ற மாதப் பத்திரிக்கையின் ஆசிரியராய் ஊழியம் செய்தார்.

அவர், தமிழ்நாட்டிலுள்ள மதுரை பட்டணத்திற்கு 1943-ம் வருடம் ஊழியம் செய்திட காலடி பதித்தார். 15 ரூபாய் மாத வாடகையில் சுப்பிரமணியப்புரத்திலுள்ள சுண்ணாம்புகாரத் தெருவில் தன் இளம் மனைவி மரியம்மாளோடு குடியிருந்தார். அந்த ஆரம்ப காலத்தில், தன் மனைவியின் முதல் பேறுகாலத்திற்கு அரசாங்க மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்குகூட அவரிடம் பணமில்லை. பிரசவ வேதனையில் துடித்த மனைவியை 5-மைல் தூரத்திலுள்ள அரசு மருத்துவமனைக்குச் செல்ல அவர் மனைவியால் நடக்கவோ, அவரால் தூக்கி செல்லவோ முடியாது. அச்சமயத்தில் ஒரு முஸ்லீம் குதிரை வண்டிக்காரர் 'காசா பெரிசு' என மனம் உருக கூறி, வேகமாக பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார். அவருடைய மனைவியை வார்டில் சேர்த்தவுடன், இரவில் தங்க நேரிடாது என அவரை அனுப்பி விட்டார்கள்.

அந்த இரவெல்லாம், தூங்காமல் வேதனையோடு இருந்த இந்த தேவதாசன், பிசாசு கொண்டு வந்த அவிசுவாச எண்ணங்களால் தாக்கப்பட்டார்: "பிள்ளை குறைபிரசவம்! தாயும் பிள்ளையும் செத்து விடுவார்கள்! காலையில் உன் மனைவியின் உயிரற்ற சடலத்தை பார்க்கும்போது நீ என்ன செய்வாய்?" போன்ற பிசாசின் அவிசுவாச தாக்குதலால் அல்லலுற்ற நேரத்தில், கர்த்தரை "அநுக்கிரகத்தின் அதிபதியே" என்ற வலிமையான விசுவாசப் பாடல் மூலமாய் பதில் தந்து, தன் தாசனை தைரியமடையச் செய்தார். அதன்பிறகு, 250 பாடல்களை இயற்றி திரளான கிறிஸ்தவர்களை விசுவாசத்திற்கு ஊக்கமளித்தார். 'கொச்சு சார்!' என பிரியமாய் அழைக்கப்பட்ட அவர், தன் பாடல் புத்தகத்தோடு சேர்த்து, 13- புத்தகங்கள் எழுதினார். அதில் கிறிஸ்து கற்பித்த ஒழுக்கநெறிகள், சபையின் ஒழுக்க நெறிகள், பரிசுத்தாவி வழங்கும் ஒழுக்க நெறிகள் போன்ற புத்தகங்கள் பிரபல்யமானது. மற்றும் பல்வேறு ஊழியங்களை தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் செய்த அவர், 1993-ம் ஆண்டு கர்த்தரின் மகிமையில் பிரவேசித்தாலும், அநேகருடைய இருதயத்தில் மாசுபடியாத தேவதாசனாய் நிலைத்து இருக்கிறார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## 'சபை பாடல்' நேரத்தின் மூலம் 'பாவியை இரட்சித்த' ஆண்டவர்

ஒரு நாள் ஜியார்ஜ் முல்லர் தனது பள்ளி தோழன் "பெட்டா" என்பவனைச் சந்தித்தார். தான் ஒரு வேதபாட வகுப்புக்கு ஒழுங்காகச் சென்று கொண்டிருப்பதாகவும், அது மனதிற்கு மிகவும் சமாதானம் அளிப்பதாகவும் பெட்டா என்ற அந்த நண்பன் ஜார்ஜ் முல்லரிடம் கூறி அவரையும் வேதபாட வகுப்புக்கு வரும்படி அன்புடன் அழைத்தான். அந்த வேதபாட வகுப்புகளானது பெட்டா என்ற அந்த வாலிபனின் வியாபார நண்பன் "வாக்னர்" என்பவரின் வீட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அந்தக் குறிப்பிட்ட நாளில் அதாவது ஒரு சனிக்கிழமை பெட்டா தனது பள்ளி நண்பன் ஜியார்ஜ் முல்லரை அழைத்துக்கொண்டு வாக்னர் என்ற தனது வியாபார நண்பனின் வீட்டில் நடைபெறும் வேதபாட வகுப்புக்குச் சென்றார். பெட்டாவுக்கும், முல்லருக்கும் அன்பு நிறைந்த வரவேற்பு வாக்னர் வீட்டில் கிடைத்தது.

முதலாவதாக, அங்கு பக்தி பரவசம் நிறைந்த இனிமையான பாடல் ஒன்று குழுவாகப் பாடப்பட்டது. அதைத் தொடர்ந்து வேதபாடம் வாசிக்கப்பட்டு, வந்திருந்தோர் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். பாடல் நேரமும், ஜெப வேளையும் முடிந்த பிறகுதான், வேதபாட வகுப்பு துவங்கியது! கூடியிருந்த அனைவரும் அத்தனை பக்தியோடு பாடல்கள் பாடி மகிழ்ந்து ஜெபித்தார்கள்! பரவசமான பாடல் வரிகளும் அந்த கிருபை நிறைந்த ஜெபங்களும்தான் முல்லரின் பாவ இருதயத்தை அதிகமாகத் தொட்டது! அன்று தன்னை கிறிஸ்துவுக்கு ஒப்புவித்த முல்லர், மாபெரும் தேவமனிதனாய் வளர்ந்து, தனது ஊழியத்தின் மூலமாய், தேவனை மகிமைப்படுத்தினார்! கிறிஸ்தவ கூட்டங்களில், 'பாடல் நேரத்தையும்' 'ஜெப நேரத்தையும்' அற்பமாக எண்ணி, கூட்டத்திற்கு தாமதமாய் வருபவர்கள், ஒருவேளை தங்களின் பெரிய ஆசீர்வாதங்களை இழந்திடும் வாய்ப்புகூட இருக்கிறது!

மிகுந்த பக்தியோடு ஏறெடுக்கும் பாடல்கள், ஜெபங்கள்கூட 'பாவியாகிய ஒரு ஆத்துமாவை' சந்தித்து மனம் மாறச் செய்திடும்! இவ்வித பாக்கியத்தை கருதி, 'குறிப்பாக' வாலிப பிள்ளைகளை சபை ஆரம்பத்திலேயே அழைத்து வந்து அமர வைப்பது பெற்றோரின் தலையாய கடமையாய் மாறக்கடவது!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப **QR** பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**